2022 அக்டோபர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

குடியிருப்புகள்

***51687—டாக்டர் நா. எழிலன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, எண் 29, கிரீம்ஸ் சாலைப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், ஆயிரம் விளக்கு தொகுதி, எண் 29, கிரீம்ஸ் சாலைப் பகுதியில் 0.15 ஏக்கர் பரப்பில் மாநகராட்சி பொது வகைப்பாடு கொண்ட நிலத்தில் சுமார் 250 வீடுகளில் மக்கள் குடிசை கட்டி வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலத்தில் 'அனைவருக்கும் வீடு' திட்டத்தின்கீழ், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியிடம் முதற்கட்டமாக முன்நுழைவு அனுமதி கேட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, கிரீம்ஸ் சாலைப் பகுதியில் அமைந்துள்ள நிலத்திற்கு முன்நுழைவு அனுமதி கிடைத்தவுடன், விதிமுறைகளைப் பின்பற்றி, நடைமுறை சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, குடியிருப்புகள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2022 அக்டோபர் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் விளக்கு தொகுதி மக்கள் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆயிரம் விளக்கு தொகுதி என்பது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வலம் வந்த தொகுதி. தமிழ்நாட்டிலேயே குடிசை மாற்று வாரியக் கட்டடங்கள் அதிகமாக இருக்கின்ற தொகுதி. ஆயிரம் விளக்கு தொகுதியில் கிட்டத்தட்ட 34 தொகுப்புகள் இங்கு உள்ளன. தீ விபத்து காரணமாக பலர் மாண்ட நேரத்தில், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, எண் 29, கிரீம்ஸ் சாலையில் கிட்டத்தட்ட 400 குடும்பங்களுக்கு கல்நார் வீடுகள் கொடுத்து அவர்களின் உயிர்களைப் பாதுகாத்தவர். அதேபோன்று, கார்ப்பரேஷன் காலனியில் 150 குடும்பங்களுக்கும், சுதந்திரா நகர்* extension*–ல் இருக்கும் 400 குடும்பங்களுக்கும், அதேபோன்று வெவ்வேறு அரசாங்கத் துறைகளின் நிலங்களுக்கு,* No Objection Certificate *அல்லது* Enter upon permission *போன்ற அனுமதிகளை விரைவுபடுத்துவதற்கான நிலையினை விளக்கி, இந்தப் பகுதிகளிலும் புதியதாக குடியிருப்புகள் கட்டப்படுமா என்ற கேள்வியைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டம், ஆயிரம் விளக்கு தொகுதி, சுதந்திரா நகர் விரிவாக்கப் பகுதியில் அரசுக்குச் சொந்தமான, காவல் துறையின் பயன்பாட்டில் உள்ள நிலத்தில் சுமார் 200 குடிசை வீடுகள் தனித்தனியாக அமைத்து, அங்கு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அதேபோல, கார்ப்பரேஷன் குடியிருப்பு திட்டப் பகுதியிலும்கூட, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பயன்பாட்டில் உள்ள நிலத்தில், சுமார் 120 குடிசை வீடுகள் தனித்தனியாக அமைத்து மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த இரு குடிசைப் பகுதிகளுக்கும், சென்னை மாவட்ட ஆட்சியரிடம் முதற்கட்டமாக முன்நுழைவு அனுமதி கேட்டு 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனவே,*

2022 அக்டோபர் 18]

முன்நுழைவு அனுமதி கிடைத்தவுடன், விதிமுறைகளைப் பின்பற்றி, நடைமுறை சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து குடியிருப்புகளைக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், குடியிருப்புப் பகுதிகளில் சமூக நீதியை நிலைநாட்டியவர். 1976 ஆம் ஆண்டு அவருடைய ஆட்சிக் காலத்தில் புஷ்பா நகர் திட்டப் பகுதியில், கிட்டத்தட்ட 1,024 குடியிருப்புகள் கட்டப்பட்டு, 46 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த வீடுகள் அனைத்தையும் சீரமைப்பு செய்கின்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இருப்பினும், முழுமையாக புஷ்பா நகர் தொகுப்பில், புதிதாக குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படுமா என்ற கேள்வியைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஷ்பா நகர் திட்டப் பகுதியில், 1976 ஆம் ஆண்டு 30 தொகுப்புகளுடன் 1,024 குடியிருப்புகள் கட்டப்பட்டன. நீண்ட நாள் பயன்பாட்டினாலும், தட்பவெப்ப சூழ்நிலையின் காரணமாகவும் சிதிலமடைந்த இக்குடியிருப்புகளை மறுகட்டுமானம் செய்வதற்கு வல்லுநர் குழுவும் பரிந்துரை செய்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவருடைய ஒப்புதலைப் பெற்று, வருகின்ற ஆண்டுகளில் அந்தத் திட்டப் பகுதியில் உள்ள மக்களுக்கு புதிய வீடுகள் கட்டித்தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*